செய்தி வெளியீடு எண்: 851.                                        நாள் :  1.10.2010.

**<u>சென்னை மாநகரிலுள்ள உணவுப்பொருள் வழங்கல் துறையின் உதவி ஆணையர்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வு</u>**

**<u>நரிக்குறவர் இனத்தவர்களுக்கும், நடைபாதையில் வசிப்பவர்களுக்கும் தகுந்த விசாரணை செய்து குடும்ப அட்டைகள் வழங்கப்படும்</u>**

**<u>மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆணை</u>**

* * * *

சென்னை மாநகரிலுள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் உதவி ஆணையர்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (01.10.2010) மாலை 4.00 மணிக்கு சென்னை, கோபாலபுரம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகக் கூட்ட அரங்கில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல், போலி குடும்ப அட்டைகள் களைதல், நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் ஒதுக்கீடு செய்தல், எரிவாயு அடுப்புகள் வழங்குதல், 1,600 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளை இரண்டாக பிரித்தல் போன்ற அத்தியாவசியப் பணிகளை மேற்கொண்டு வரும் உதவி ஆணையர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் உரையாற்றுகையில் புதிய குடும்ப அட்டைகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் வழங்கப்பட வேண்டும் என்றும், குடும்ப அட்டை தயாரானதும் விண்ணப்பதாரர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

நரிக்குறவர் இனத்தவர்களுக்கும், நடைபாதையில் வசிப்பவர்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கும்போது தீர ஆய்வு செய்து வழங்க வேண்டும். இவர்களுக்கு வழங்கப்படும் குடும்ப அட்டைகளில் 25 சதவீத விண்ணப்பங்களை துணை ஆணையர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

மேலும் குடிசை மாற்று வாரிய வீடுகளில் வசிப்பவர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை, மின் கட்டணம் செலுத்திய ரசீது, தொலைபேசி கட்டணம் செலுத்திய ரசீது, வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் ஆகிய ஏதாவது ஒரு ஆதாரத்தின் அடிப்படையில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

போலி குடும்ப அட்டைகள் குறித்து இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டதும் உதவி ஆணையர்கள் அலுவலக ‘அ’ பதிவேட்டிலும், நியாயவிலைக் கடைகளிலுள்ள ‘அ’ பதிவேட்டிலும் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உதவி ஆணையர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று உதவி ஆணையர்கள் தினமும் ஒரு குறிப்பிட்ட நியாயவிலைக் கடைகளில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு ஆய்வுக்கு செல்லும் போது நியாயவிலைக்

கடைகளில் உள்ள பொருட்கள் விற்பனைக்கு தகுதியானதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். **1600** குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள **441** நியாயவிலைக் கடைகளை இரண்டாக பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்பட அனைத்து அலுவலர்களும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், பணியில் சிரமங்கள் மற்றும் குறைபாடுகள் இருப்பின், உடனுக்குடன் உயர் அலுவலர்களை தொடர்பு கொண்டு பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், நியாயவிலைக் கடைகளில் விற்கப்படும் அனைத்து பொருட்களையும் ஆய்வு செய்து தரமான பொருட்கள் தான் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். சென்னை மண்டலத்திலுள்ள அனைத்து கிடங்குகளுக்கும் மாதத்தில் 3, 4 தடவைகள் முன் நகர்வுப் பணிகள் நடைபெறும் நேரம் மற்றும் தொடர்ந்து நகர்வுப் பணிகள் நடைபெறும் நேரங்களிலும் உதவி ஆணையர்களும், துணை ஆணையர்களும் சென்று, லாரியிலிருந்து ஏற்றிய பொருட்களை இறக்கி கண்டிப்பாக மறு எடை போட்டு பார்த்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் பொருட்களின் எடை சரியாகவும், தரமாகவும் உள்ளதா என்பதை கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

ஒவ்வொரு மண்டல உதவி ஆணையர்களின் பணிகள் குறித்து தனித்தனியாக ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் திரு. ஸ்வரன் சிங், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. கா. பாலச்சந்தர், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுத் துறை மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**